THE TIMES OF INDIA

1 MARCH 2023

PAGE 4

# Follow your hearts, Jipmer director tells students

TIMES NEWS NETWORK

**Puducherry:** Convocation is also referred to in some cultures as the commencement ceremony, a concept equivalent to initiation, consecration or sacrament, said Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (Jipmer) director Rakesh Aggarwal. Speaking after awarding degrees to students, who successfully completed their courses during the 29th convocation of Pondicherry University on Tuesday, Aggarwal said convocation relates to advice on how a fresh graduate must use the knowledge.

"Hence, the concept of convocation is not merely one of celebration – instead, the day is imbued with a deeper and more solemn meaning," he said.

He appealed to the students to follow their hearts.

"Let me explain using an example from the medical field. A graduate has several diverse paths available – joining a teaching institution; joining a corporate hospital; starting solo practice; working with a NGO at the grassroots level; join an international agency engaged in public health doing laboratory research; or even joining public service or politics," Rakesh Aggarwal said

"Similarly, the other professions too have their myriad possible career choices. You will need to decide which of these paths to follow. You will need to make choices in life. How many hours should I work? What am I most interested in – social work, teaching, money, respect, etc. What gives me happiness? While making these choices, follow your heart. The path your heart suggests may appear to be difficult to follow, but things will eventually work out," he said.

He also advised the students to maintain a certain degree of intellectual nimbleness so that they are ready to seize new opportunities. "With the current rapid changes in science and technology, several professions are undergoing rapid transformation, and hence the nimbleness to change with the changing time will be an important attribute," he said.

Pondicherry University vice-chancellor said the university has signed more than 75 memorandums of understanding in the last five years with higher educational institutions from Germany, France, Switzerland, Taiwan and national agencies such as ICMR, NIAS, ICSI, Indian Air Force, Indian Army, and Auroville Foundation.

THE HINDU

1 MARCH 2023

PAGE 4



# 426 students receive degrees at Pondicherry University convocation

**The Hindu Bureau**
PUDUCHERRY

A total of 426 students were awarded their degrees at the 29th annual convocation of Pondicherry University at Kalapet on Tuesday. Puducherry Home Minister A. Namassivayam, who was also the chief guest on the occasion, delivered the convocation address.

Of the total students, 237 candidates received their Ph.D degrees, and 189 students received gold medals.

Mr. Namassivayam highlighted the advancements in the education sector in the Union Territory and said that the Puducherry government was earmarking copious funds for education. The government had allocated ₹1,100 crore for the education sector during the last Budget, he said, adding that education was among the top priorities of the government.

Pondicherry University Vice-Chancellor Prof. Gurmeet Singh said the university had entered into Memoranda of Understanding (MoU) with more than 75 higher educational institutions from Germany, France, Switzerland, Taiwan, and national agencies such as the Indian Council of Medical Research (ICMR), National Institute of Advanced Studies (NIAS), Indian Air Force, Indian Army, and the Auroville Foundation. Minister for Civil Supplies Sai J. Saravanan Kumar; MPs S. Selvaganabathy, V. Vaithilingam, and Kalapet MLA P.M.L. Kalyanasundaram were also present.

DINAMALAR

1 MARCH 2023

PAGE 2

# காலத்துக்கு ஏற்ற திறனை பெற புதிய கல்விக் கொள்கை அவசியம்

## அமைச்சர் நமச்சிவாயம் பேச்சு




■ புதுச்சேரி பல்கலையில் நேற்று நடந்த பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் நமச்சிவாயம் மாணவர்களுக்கு பட்டம் வழங்கினார். அருகில் அமைச்சர் சாய்சரவணன் குமார், எம்.பி.,க்கள் வைத்திலிங்கம், செல்வகணபதி, கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால்,

**புதுச்சேரி, மார்ச் 1**

காலத்துக்கு ஏற்ற திறனைப் பெற புதிய கல்விக் கொள்கை அவசியமாகிறது என அமைச்சர் நமச்சிவாயம் பேசினார்.

புதுச்சேரி மத்திய பல்கலையில் நேற்று நடந்த 29வது பட்டமளிப்பு விழாவிற்கு துணை வேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கினார். மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கிய ஜிப்மர் இயக்குநர் ராகேஷ் அகர்வால் பேசுகையில், 'பட்டம் பெற்றதோடு, கல்வி கற்பதை நிறுத்தி விடக்கூடாது.

தொடர்ந்து கற்பது அவசியம். கற்ற கல்வி மூலம் சமூக மேம்பாட்டுக்கான ஆணி வேராக நாம் இருக்க வேண்டும். நமது குடும்பம், உறவினர், நண்பர்கள், நாம் கல்வி கற்ற நிறுவனம் என அனைவரும் நம்மால் பெருமைப்படும் வகையில் நமது செயல்பாடு இருக்க வேண்டும் என்றார்.

விழாவில் அமைச்சர் நமச்சிவாயம் பேசியதாவது;

புதுச்சேரியை சிறந்த கல்வி கேந்திரமாக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்துள்ளன. கல்வி உள்கட்டமைப்பை மேம்படுத்த திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

காலத்துக்கு ஏற்ற திறனைப் பெறுவதற்கு புதிய கல்விக் கொள்கை அவசியமாகிறது. போட்டி நிறைந்த உலகில் நமது மாணவர்கள் சவால்களை எதிர்கொள்ளும் வகையில பிரதமர் மோடி புதிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளார். கல்வி கற்பதற்கான வசதியுடன், வேலைவாய்ப்புகளையும் உருவாக்குவதும் அவசியம். மறைந்த ஜனாதிபதி அப்துல்கலாம் கூறியது போல இந்தியா வல்லரசாக நாட்டுப்பற்றுடன் அனைவரும் பாடுபட வேண்டும் என்றார்.

விழாவில், ஆராய்ச்சிப் பட்டம் 278 பேருக்கும், இளநிலை, முதுநிலையில் தங்கப்பதக்கம் பெற்ற 126 பேருக்கும் அரங்கில் பட்டச் சான்றும், பாராட்டுப் பதக்கமும வழங்கப்பட்டன. விழா மூலம் மொத்தம் 32,226 பேருக்கு பட்டம் வழங்கப்பட்டன.

விழாவில் அமைச்சர் சாய்சரவணன்குமார், எம்.பி.,க்கள் வைத்திலிங்கம், செல்வகணபதி, கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

DINAKARAN

1 MARCH 2023

PAGE 14

# கல்வியறிவை நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும்

## அமைச்சர் நமச்சிவாயம் மாணவர்களுக்கு அறிவுரை

புதுச்சேரி, மார்ச் 1: புதுச்சேரி பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் அமைச்சர் நமச்சிவாயம் பேசுகையில், புதுச்சேரி பல்கலைக்கழகம் நமது மாநிலத்துக்கு பெருமையை தேடித்தரக்கூடிய நிலையில் திகழ்ந்து கொண்டிருக்கிறது. புதுச்சேரி மாநிலத்தை கல்வி கேந்திரமாக உருவாக்க வேண்டும் என்பது தான் அரசின் எண்ணம். அதற்காக புதுச்சேரி அரசும், ஒன்றிய அரசும் நிதியை ஒதுக்கி பல்வேறு நிலைகளில் செயல்படுத்தி வருகிறது. கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டும், மாணவர்களுக்கு உரிய வசதி வாய்ப்புகளை உருவாக்கி கொடுக்க வேண்டும் என்று புதுச்சேரி மாநிலத்தின் சென்ற நிதி நிலை அறிக்கையில் ரூ.1,100 கோடி நிதி ஒதுக்கப்பட்டு பல்வேறு நிலைகளில் அந்த நிதி செலவிடப்பட்டு வருகிறது.

ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் நம்முடைய மாநிலத்துக்கும், நமது பல்கலைக்கழகத்துக்கும் தேவையான நிதியை ஒதுக்கி கொடுத்துக்கொண்டிருக்கிறார். பிரதமர் நரேந்திர மோடி கல்வியில் மாணவர்கள் சிறப்பான நிலையை அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் புதிய கல்வி கொள்கையை கொண்டு வந்து உருவாக்கி வருகின்றார். இன்றைக்கு மாறி வருகின்ற உலகம், நாட்டின் சூழ்நிலைக்கு ஏற்ப கல்வியை மாணவர்களுக்கு போதிக்க வேண்டியது என்பது அவசியமாக ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. போட்டி, பரபரப்பு நிறைந்த உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அப்படி போட்டி, பரபரப்பு நிறைந்த உலகில் வாழ வேண்டும் என்றால், நம்மை நாம் நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றால், இதைப்போன்ற கல்வியை நாம் கற்க வேண்டியதன் அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

அதற்காகத்தான் பிரதமர் புதிய கல்விக்கொள்கையை நமது நாட்டில் கொண்டு வந்து மாற்றங்களை செய்து கொண்டு வருகிறார்.

புதுச்சேரியில் கல்வியை கொடுப்பது மட்டுமல்லாமல், வேலை வாய்ப்புகளையும் உருவாக்கி கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு அத்தனை முன்முயற்சிகளையும் எடுத்து வருகிறது. நீங்கள் (மாணவர்கள்) பெற்றுள்ள இந்த பட்டமானது நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக இருக்க வேண்டும். நாட்டின் குடிமகன் வளர்ந்தால் தான் நாடு வளர்ந்ததாக அர்த்தம். இன்றைக்கு நமது நாடு உலக நாடுகளுடன் போட்டிபோட்டு முன்னேறக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறது.

நமது நாட்டை வல்லரசு நாடாக உருவாக்க வேண்டும் என்று முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் கனவு கண்டார். அந்த கனவை நிறைவேற்ற வேண்டும் என்றால், ஒவ்வொரு குடிமகனும் உழைத்தாக வேண்டும். அவ்வாறு உழைத்தால்தான் வல்லரசு நாடாக உருவாக்க முடியும். அதற்கான முயற்சியை பிரதமர் எடுத்துக்கொண்டிருக்கிறார். எனவே கல்வி அறிவை நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும் என்றார்.